தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரும், மக்கள் நல்வாழ்விற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவரும், காங்கிரஸ் கட்சியில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவரும், எளிமையும் அடக்கமும் கொண்டு வாழ்ந்தவரும், முன்னாள் மத்திய மின் துறை அமைச்சரும், கேரள மாநிலத்தின் முன்னாள் மாநில ஆளுநரும் 1957 முதல் 1962 வரை செய்யாறு தொகுதியிலிருந்தும், 1962 முதல் 1967 வரை பெரணமல்லூர் தொகுதியிலிருந்தும் தொடர்ந்து இரு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1962 முதல் 1967 வரை அரசு தலைமைக் கொறடாவாகப் பணியாற்றியவரும், அனைத்துத் தரப்பினராலும் பா.ரா. என்று அன்புடன் அழைக்கப்பட்ட திரு. பா. ராமச்சந்திரன் அவர்கள் 23-5-2001 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(இ) திரு. ப. குழந்தைவேலு, முன்னாள் தமிழக அமைச்சர்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த இரங்கல் தீர்மானம் - திரு. ப. குழந்தைவேலு, முன்னாள் தமிழக அமைச்சர் அவர்கள் மறைவு குறித்து.

இனிய பண்பும், அடக்கமும் கொண்டவரும் 1977-80, 1980-84 ஆகிய ஆண்டுகளில் உடுமலைப்பேட்டை தொகுதியிலிருந்து தொடர்ந்து இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், வேளாண்மைத் துறை அமைச்சராகவும், உள்ளாட்சித் துறை அமைச்சராகவும், புதுடெல்லியில் தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதியாகவும் பணியாற்றிய திரு. ப. குழந்தைவேலு அவர்கள் 12-4-2001 அன்று சாலை விபத்தில் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஈ) திரு. எம்.ஆர். கோவேந்தன், முன்னாள் தமிழக அமைச்சர்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. எம். ஆர். கோவேந்தன், முன்னாள் தமிழக அமைச்சர் அவர்கள் மறைவு குறித்து.